Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

THURSDAY, JANUARY 18, 2024

வியாழக்கிழமை ஜனவரி 18, 2024 | ஒளி: 10 கதிர் 174 | பக்கம்:06 | நகரப்பதிப்பு ★ | FREE

## தவணை பிந்தியது

அரசு மற்றும் அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளில் அடுத்த பாடசாலை தவணை பெப்ரவரி 5ஆம் திகதி ஆரம்பமாகும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. புதிய பாடசாலை தவணை பெப்ரவரி 2ஆம் திகதி ஆரம்பமாகுமென கல்வி அமைச்சு, முன்னதாக முடிவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

### துமிந்தவுக்கு வழங்கப்பட்ட ஜனாதிபதி மன்னிப்பு

# சட்டத்தில் செல்லாது





முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு வழங்கிய ஜனாதிபதி பொதுமன்னிப்பை உயர்நீதிமன்றம் புதன்கிழமை (17) நிராகரித்தது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கிய முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவின் முடிவு தன்னிச்சையானது மற்றும் சட்டத்தில் செல்லுபடியாகாது என்று உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

தொடர்ச்சி P2

### பொது மன்னிப்பை செல்லுபடியற்றதாகியது

# "சரித்திர தீர்ப்பு"



ஜனாதிபதி ஒருவருடைய பொது மன்னிப்பு செல்லுபடியற்றது என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளமை இலங்கை சரித்திரத்திலே முதல் தடவையாகும் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு-மாங்குளம் நீதிமன்றத்துக்கு பொதுமக்களின் காணி விடயம் தொடர்பான வழக்கு விசாரணை ஒன்றிற்காக எம்.ஏ. சுமந்திரன், புதன்கிழமை (17) வந்திருந்தார். அவரிம், மேற்படி உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு தொடர்பில் கேள்வியெழுப்பியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## எடப்பாடி பழனிசாமியை "செல்வந்தி"யில் சந்தித்தார் ஜீவன்

அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தின் (அ.தி.மு.க) பொதுச்செயலாளரும், தமிழக எதிர்க்கட்சி தலைருமான எடப்பாடி பழனிசாமிக்கும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமானுக்கும் இடையில் புதன்கிழமை (17) சந்திப்பு நடைபெற்றது.

சென்னையில் உள்ள முன்னாள் முதல்வர் எடப்பாடி



பழனிசாமியின் " செல்வந்தி" இல்லத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில் முன்னாள் அமைச்சரும், தமிழக சட்டமன்ற உறுப்பினருமான கடம்பூர் கே.ராஜூவும் பங்கேற்றிருந்தார்.

தொடர்ச்சி P2

## 13 வருடங்கள் இலவசமாக சாப்பாடு கொடுத்தவரை கொத்திய யாசகர்

சுமார் 13 வருடங்களாக பகலுணவை இலவசமாகக் கொடுத்த ஹோட்டல் உரிமையாளரின் மனைவியை கத்தியால் கொத்திய யாசகர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சாப்பாடு வழங்குவதற்கு தாமதமாகிவிட்டதாகக் கூறியே இவ்வாறு கத்தியால் தலையில் கொத்தியுள்ளார்.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட யாசகரை எதிர்வரும் 30ஆம் திகதி வரையிலும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் பிரசன்ன அல்விஸ் செவ்வாய்க்கிழமை (16) உத்தரவிட்டுள்ளார்.

மார்டின் லியனகே என்றழைக்கப்படும் யாசகரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதவான், யாசகரின் மனநல மருத்துவ அறிக்கையை நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்குமாறும் பொலிஸாருக்கு கட்டளையிட்டார்.

தொடர்ச்சி P2

### முதுகெலும்பில்லாத அரசாங்கம்

## "தேர்தல்கள் தொடர்பில் தம்பட்டம் அடிக்கிறது"



ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படும் என்ற செய்தியைப் பரப்பி மக்களிடமிருந்து கிடைக்கும் கருத்துக்களை ஆராய்ந்து ஜனாதிபதி எடை போட்டு வருகிறார். சுயேச்சை வேட்பாளர்கள் மற்றும் ஐ.தே.க வேட்பாளர் யார் என்பதில் ஜனாதிபதியும் மொட்டும் தற்போது குழப்பத்தில் உள்ளனர். உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்குக் கூட முதுகெலும்பில்லாத இந்த அரசாங்கம் பொதுத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் என்று தம்பட்டம் அடித்து வருகிறது என்று குற்றஞ்சாட்டிய எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்கும் எந்தவொரு தேர்தலையும் எதிர்கொள்ள ஐக்கிய மக்கள் சக்தியும் மக்களும் தயாராகவே உள்ளனர் என்றார்.

தொடர்ச்சி P2

## தனியார் வகுப்புகளுக்கு 30 சதவீதம் செலவு



தற்போதைய போட்டிக் கல்வி முறைமையில் அரசாங்கம் பாடசாலைக் கல்விக்காக செலவிடும் தொகையை விட பெற்றோர்கள் 30 சதவீதம் அதிகமாக தனியார் வகுப்புகளுக்காக செலவிட வேண்டியுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இன்றைய நிலையில் கல்விக் கட்டணம் நாட்டின் அத்தியாவசிய நாணயங்களில் ஒன்றாக மாறியுள்ளது.

"பொதுவாக ஒரு பிள்ளைக்காக 20,000 ரூபாயை பிரத்யேக வகுப்பிற்காக பெற்றோர் செலவழிக்கின்றனர்.

தொடர்ச்சி P2

### ஒன்லைன் பாதுகாப்பு சட்டத்தை

## "நாங்கள் ரத்து செய்வோம்"

"உண்மையான நிகழ்நிலை பாதுகாப்பிற்கு நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். எனவே சிறுவர் ஆபாச மற்றும் பிற தீவிரமான ஒன்லைன் குற்றங்கள் போன்ற பிரச்சனைகளை முக்கிய தளங்களின் ஒத்துழைப்புடன் நாங்கள் அறிமுகப்படுத்துவோம்.

இது இலங்கை சமூகத்தின் நல்வாழ்வுக்கு முக்கியமானது. அவசர முடிவுகளை விட பயனுள்ள தீர்வுகளுக்கு முன்னுரிமை அளிப்போம்." என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா கூறினார். "ஒன்லைன் பாதுகாப்பு சட்டமூலத்தை அமல்படுத்துவதற்கான அரசாங்கத்தின் நடவடிக்கையை நாங்கள் கடுமையாக எதிர்க்கிறோம். நிறைவேற்றப்பட்டால்,



தொடர்ச்சி P2


## "சீர்குலைக்க சில தரப்பினர் முயற்சி"

நாட்டை கட்டியெழுப்புவதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முன்னெடுக்கும் வேலைத்திட்டத்தை தவிர, வேறு மாற்று வழியில்லை எனவும், எனவே அனைத்து தரப்பினரும் கருத்து வேறுபாடுகளைத் தவிர்த்து அந்த வேலைத்திட்டத்தின் வெற்றிக்கு பங்களிக்க வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.



தொடர்ச்சி P2

## கடுவன்களுக்கு கருத்தடை



மாத்தளை மாவட்டத்தில் குரங்குகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில், ஆண் குரங்குகளுக்கான கருத்தடை திட்டத்தை வெகு விரைவில் அமுல்படுத்தவுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் நாலக பண்டார கோட்டேகொட தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## மீன் குஞ்சிகளுடன் இந்தியர்கள் 18 பேர் கைது

■ றொசேரியன் லெம்பட்

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் இந்திய கடற்றொழிலாளர்கள் 18 பேர்,செவ்வாய்க்கிழமை மாலை (16) கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.



## 'யுக்திய'வுக்கு ஆசி வேண்டி நல்லூரில் விசேட வழிபாடு

■ எம்.றொசாந்த்

நாடாளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் போதைப்பொருள் தடுப்பு விசேட செயற்றிட்டமான 'யுக்திய' நடவடிக்கைக்கு ஆசி வேண்டி யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசாமி ஆலயத்தில் பொலிஸார் விசேட பூஜை வழிபாட்டில் ஈடுபட்டனர்.

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

# சட்டத்தில் செல்லாது



அரசியலமைப்பு விதிகளைப் பின்பற்றாததற்காக துமிந்த சில்வாவுக்கு வழங்கப்பட்ட ஜனாதிபதி பொது மன்னிப்பை ரத்து செய்யுமாறு உயர் நீதிமன்ற நீதியரசர்களான பிரீத்தி பத்மன் சூரசேன, காமினி அமரசேகர மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகிய மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் உத்தரவிட்டுள்ளது.

இதேவேளை, துமிந்த சில்வா தொடர்பில் உயர் நீதிமன்ற தீர்ப்பை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்குமாறு சிறைச்சாலை அதிகாரிகளுக்கு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

2011 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 8 ஆம் திகதி அல்லது அதனை அண்மித்த நாட்களில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர உட்பட நால்வரைப் படுகொலை செய்த குற்றச்சாட்டில் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் கண்காணிப்பு பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா உட்பட ஐந்து குற்றவாளிகளுக்குக் கொழும்பு மேல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்திருந்தது.

2021ஆம் ஆண்டு துமிந்த சில்வாவிற்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்கியமைக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட மூன்று அடிப்படை உரிமை மனுக்கள் தொடர்பான இறுதித் தீர்ப்பை உயர் நீதிமன்றம் வழங்கியது.

இந்த பொது மன்னிப்பின் சட்டபூர்வ தன்மையைக் கேள்விக்குட்படுத்தி அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் மூன்று உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன.



முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர, அவரது தாயார் சுமனா பிரேமச்சந்திர மற்றும் மனித உரிமைகள் முன்னாள் ஆணையாளர் கஸாலி ஹுசைன் ஆகியோரினால் இந்த அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# “சரித்திர தீர்ப்பு”

ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ஷ, துமிந்த சில்வாவிற்கு கொடுத்த மன்னிப்பைப் புறந்தள்ளி அது தவறாகச் சட்டவிரோதமாகக் கொடுக்கப்பட்ட மன்னிப்பு செல்லுபடியற்றது என்று தீர்ப்பளித்துள்ளது.

பாரத லக்ஷ்மன் பிரேமசந்திரவின் கொலை சம்பந்தமாக மரண தண்டனைக்கு உட்படுத்தப்பட்ட துமிந்த சில்வாவிற்கே இந்த தீர்ப்பு கொடுக்கப்பட்டது. மனுதாரர்களில் ஒருவரான ஹிருணிகா பிரேமசந்திர சார்பிலே நான் ஆஜராகி வாதாடி இருக்கின்றேன் .

ஜனாதிபதி ஒருவருடைய மன்னிப்பு செல்லுபடியற்றது என நீதிமன்றம் இலங்கை சரித்திரத்திலே முதல் தடவையாகத் தீர்ப்பளித்து இருக்கின்றது. இது வரவேற்க வேண்டிய ஒரு விடயம், வேறு சில வழக்குகளும் நிலுவையிலே இருக்கின்றன.

விசேடமாக மிருசுவில் படுகொலையாளி சுனில் ரட்நாயக்கவுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, கொடுத்த பொது மன்னிப்பையும் நாங்கள் சவாலுக்கு உட்படுத்தி இருக்கின்றோம். அந்த தீர்ப்பு இன்னும் வெளிவரவில்லை என மேலும் தெரிவித்தார்.



## எடப்பாடி பழனிசாமியை “செல்வந்தி”யில் சந்தித்தார் ஜீவன்

மரியாதை நிமித்தம் நடைபெற்ற இச்சந்திப்பின்போது எதிர்க்கட்சி தலைவருக்கு பொங்கல் வாழ்த்துகளை தெரிவித்த அமைச்சர் ஜீவன் தொண்டமான், மலையக தமிழர்களின் மேம்பாட்டுக்காக அ.தி.மு.க. தொடர்ந்தும் குரல் கொடுத்துவருவதற்கு நன்றிகளையும் தெரிவித்தார்.

அத்துடன், இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி மக்களை தேசிய நீரோட்டத்தில் சங்கமிக்க வைக்கும் வகையில் நடத்தப்பட்ட நாம் - 200 நிகழ்ச்சி குறித்தும், எதிர்வரும் 21 ஆம் திகதி மலையகத்தில் நடைபெறவுள்ள தேசிய பொங்கல் விழா தொடர்பிலும் அமைச்சர் தெளிவுபடுத்தினார்.

அதேவேளை, இலங்கைக்கு குறிப்பாக மலையகப் பகுதிகளுக்கு பயணம் மேற்கொள்ளுமாறும் எடப்பாடி பழனிசாமிக்கு, அமைச்சர் ஜீவன் தொண்டமான் அழைப்பு விடுத்தார்.

## தனியார்...

நம் நாட்டில் 5.7 மில்லியன் குடும்பங்கள் உள்ளன, பெற்றோர்கள் குறித்த வகுப்புகளுக்காக சுமார் ரூ.121 முதல் ரூ.122 பில்லியன் வரை செலவிடுகிறார்கள்” என்றார்.

தெஹியோவிட்ட பாடசாலையொன்றில் செவ்வாய்க்கிழமை (16) இடம்பெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

2024ஆம் ஆண்டுக்காக நிதியமைச்சகத்திலிருந்து அரசாங்கம் 546 பில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது. மொத்தக் கல்விச் செலவீனத்தில் 402 பில்லியன் ரூபாய் நாட்டிலுள்ள பாடசாலைக் கல்விக்காக ஒதுக்கப்பட்டது. இதில் மக்களின் தனியார் வகுப்பு கல்விச் செலவுகள் சேர்க்கப்படவில்லை. நம் நாட்டில் உள்ள பணவீக்கம் குறித்து ஆராய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது” என்றும் அமைச்சர் கூறினார்.

## கடுவன்களுக்கு...

மாத்தளை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துரைத்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அவர், “மாத்தளை மாவட்டத்தில் கடந்த சில காலங்களாக பயிர்செய்கைகளுக்கு ஆண் குரங்குகள் அதிகமாகப் பாதிப்பை ஏற்படுத்துவதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இலங்கையைப் பொருத்தவரை ஆண் குரங்குகளுக்கு முதன்முறையாக கருத்தடை திட்டத்தை முன்னோடி திட்டமாக முன்னெடுக்கப்படுகின்றது. இதனை மேற்கொள்வதற்கு நிதியும் ஒதுக்கப்பட்டுள்ளது.” என தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பேராதனைப் பல்கலைக்கழக கால்நடை மருத்துவப் பிரிவும் பேராதனை போதனா வைத்தியசாலையும் இணைந்து குரங்குகளின் கர்ப்பத்தைத் தடுப்பதற்காக ‘லூப் கருத்தடை’ எனப்படும் கருப்பையக சாதனத்தை (IUD) அறிமுகப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக பேராதனை பல்கலைக்கழக கால்நடை மருத்துவ அறிவியல் துறை பேராசிரியர் அசோக தங்கொல்ல கடந்த வருடம் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## மீன் குஞ்சிகளுடன்...

மன்னார் மாவட்டம் தாழ்வுபாடு கடல் பகுதியை அண்மித்த கடற்பரப்புக்குள் இரண்டு டோலர் படகுகளில் மீன்பிடியில் ஈடுபட்ட தமிழக கடற்றொழிலாளர்களே கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கைதான 18 கடற்றொழிலாளர்களும் அவர்கள் பயன்படுத்திய இரண்டு டோலர் படகுகளும் கடற்படையினரால் தாழ்வுபாடு கடற்படை முகாமுக்கு கொண்டுவரப்பட்டன.

அதன்பின்னர் 18 கடற்றொழிலாளர்களும் மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

அவர்களிடம் நடத்திய விசாரணைகளின் பின்னர் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் அவர்களை மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

## 13 வருடங்கள்...

ஹோட்டல் உரிமையாளரின் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த சட்டத்தரணி மஞ்சுள பத்திராஜா,

கொழும்பு போக்குவரத்து வாகன பொலிஸுக்கு அண்மையில் ஹோட்டல் நடத்திவரும் தன்னுடைய வாடிக்கையாளர், பிரதிவாதி கூண்டிலிருக்கும் யாசகருக்கு சாப்பாடு கொடுப்பார்.

இன்றைக்கு 13 வருடங்களாக இவ்வாறு இலவசமாக சாப்பாடு வழங்கியுள்ளார். யாசகர் ஒருவேளை சாப்பாட்டுக்கு மட்டுமே இந்த ஹோட்டலுக்கு வருவார்.

சம்பவ நாளான்று, சாப்பாடு அடங்கிய பீங்கானை கொடுப்பதற்கு 10 நிமிடங்கள் தாமதமாகிவிட்டது.

அவர், மஹியங்கனை பிரதேசத்தில் உள்ள முதியோர் இல்லத்தில் இருந்து தப்பிவந்தவர். சாப்பாட்டை கொடுப்பதற்கு தாமதமாகிவிட்டது எனக் கூறியே இவ்வாறு கத்தியால், ஹோட்டல் உரிமையாளரின் மனைவின் தலையில் கொத்தியுள்ளார். எனினும், கண்ணுக்கு மேல் அடிபட்டதால் அவர் உயிர் பிழைத்தார். அவருக்கு பிணை வழங்குவதற்கு நாங்கள் முழுமையாக எதிர்க்கின்றோம். எங்குச் சென்றாலும் அவர், சுற்றிக்கொண்டு அவ்விடத்துக்கே வந்துவிடுவார் என நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

வாழைத்தோட்ட பொலிஸார் மற்றும் பாதிக்கப்பட்டயோர் தரப்பில் ஆஜராகியிருந்த சட்டத்தரணிகளின் வாதங்களை அவதானித்த நீதவான், குற்றஞ்சாட்டப்பட்டவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

## “சீர்குலைக்க...

பெப்ரவரி மாதத்தின் பின்னர் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் நட்பு நாடுகளுடன் இணைந்து நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கான சந்தர்ப்பம் உருவாகியுள்ளதாகவும், அதனை சீர்குலைக்க சில தரப்பினர் மேற்கொள்ளும் முயற்சிகளை இனங்கண்டு தோற்கடிக்க வேண்டிய பொறுப்பு மக்களுக்கு உள்ளது எனவும் அவர் வலியுறுத்தினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் செவ்வாய்க்கிழமை (16) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன இவ்வாறு தெரிவித்தார்.

2022ஆம் ஆண்டு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பொறுப்பேற்ற போது, இந்த நாட்டில் அரசியல் செய்யும் திறமை எவருக்கும் இருக்கவில்லை. எந்தவோர் அபிவிருத்திப் பணியையும் செய்ய யாருக்கும் பலம் இல்லை. மூன்று வருடங்களாக தடைப்பட்ட அபிவிருத்திச் செயற்பாடுகளை எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதல் மீண்டும் ஆரம்பிக்க முடிந்துள்ளது எனவும் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

## “நாங்கள்...

எதிர்காலத்தில் ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான அரசாங்கம் இந்த சர்ச்சைக்குரிய சட்டமூலத்தை ரத்து செய்யும் என்று நான் உறுதியளிக்கிறேன் என்றார்.

மேட்டா, கூகுள் மற்றும் யூடியூப் போன்ற முக்கிய தளங்களுடனான எங்கள் உறவுகளை நாங்கள் பாதிக்க மாட்டோம். அவை பொருளாதார வளர்ச்சிக்கு மிக அவசியமானவை” என அவர் தனது ட்விட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்.

## ‘யுக்திய’வுக்கு ஆசி வேண்டி நல்லூரில் விசேட வழிபாடு

பதில் பொலிஸ் மா அதிபரின் பணிப்புரைக்கிணங்க, போதைப்பொருள் ஒழிப்பு வேலைத் திட்டமாகிய ‘யுக்திய’ வேலைத் திட்டம் பொலிஸாரால் நாடுபூராகவும் முன்னெடுக்கப்பட்டு வருவதோடு போதைப்பொருள் வியாபாரிகள் மற்றும் போதைப்பொருள் கடத்துபவர்கள் என பலரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில், குறித்த ‘யுக்திய’ நடவடிக்கைக்கு ஆசி வேண்டி வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசாமி ஆலயத்தில் பொலிஸாரால் விசேட பூஜை வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

வழிபாட்டில் யாழ். மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர், யாழ்ப்பாண பிராந்திய சிரேஷ்ட அத்தியட்சகர், யாழ்ப்பாண பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர், யாழ்ப்பாண பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

## “தேர்தல்கள்...

பிரபஞ்சம் தகவல் தொழில்நுட்ப நிகழ்ச்சித் திட்டத்தின் 68 ஆவது கட்டமாக,அனுராதபுரம் ஸ்ரீ துடுகெமுனு மகா வித்தியாலயத்திற்கு 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்களை வழங்கும் நிகழ்வு புதன்கிழமை (17) இடம்பெற்றது அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இப்பாடசாலையில் நடனம் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு நடனம் மற்றும் அரங்கேற்றங்களுக்குத் தேவையான ஆடைகளைக் கொள்வனவு செய்வதற்குத் தேவையான நிதியுதவியும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவால் வழங்கி வைக்கப்பட்டது.

மேலும், மோசடியில் ஈடுபட்ட வியட்நாம் சுகாதார அமைச்சருக்கு சிறை தண்டனை,

மோசடியில் ஈடுபட்ட இலங்கையின் சுகாதார அமைச்சருக்கு வரப்பிரசாதம்!

மோசடி கும்பலொன்று ஆளும் தரப்பு அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுடன் சேர்ந்து மனித இம்யூனோகுளோபுலின் உள்ளிட்ட ஏராளமான மருந்துகளில் மோசடி செய்துள்ளனர். மனித இம்யூனோகுளோபுலின் என்ற மருந்துடன் நீர் கலக்கப்பட்டுள்ளது. ஆளும் தரப்பு அமைச்சர்கள் ஜனாதிபதியின் பாதுகாப்பில் திருடும்போது கூட ஜனாதிபதி இந்த அமைச்சர்களை வெளியேற்றாது அவர்களைப் பாதுகாத்துக் கொண்டே வருகிறார் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

மருந்துப்பொருள் மோசடி செய்த சுகாதார அமைச்சருக்கு எதிராக எதிர்க்கட்சி நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்த போது ஜனாதிபதி,மொட்டுக் கட்சியின் 113 பேரைப் பயன்படுத்தி சுகாதார அமைச்சரைப் பாதுகாத்தாலும்,சமீபத்தில், வியட்நாமில் கூடிய விலையில் கொவிட் பரிசோதனை உபகரண தொகுதிகளைக் கொள்வனவு செய்யும் விடயத்தில் நிதி முறைகேடு காரணமாக,22 இலட்சம் அமெரிக்க டொலர் திருடிய குற்றத்துக்காக வியட்நாம் சுகாதார அமைச்சருக்கு 18 வருடங்களும்,அமைச்சருடன் இணைந்து திருட்டில் ஈடுபட்ட தொழிலதிபருக்கு 29 வருடங்களும் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.வியட்நாமில் இவ்வாறு நடக்கும் போது, இந்நாட்டில் ஊழல் மோசடியில் ஈடுபட்ட சுகாதார அமைச்சரை பாதுகாக்க ஜனாதிபதி முதல் ராஜபக்ஷ, மொட்டுக் குழுவின் கையாட்கள் சகலரும் கை தூக்கி உதவினார்கள். வியட்நாம் இலங்கையைப் போல் வங்குரோத்தல்லாத வேகமாக அபிவிருத்தி கண்டு வரும் நாடு. இந்த அபிவிருத்தியடைந்து வரும் நாட்டிலும் திருட்டுக்குத் தண்டனை வழங்கப்படும் போது, வங்குரோத்தான நாட்டில், மக்கள் மீது பெரும் வரிச்சுமை சுமத்தப்பட்டு, திருட்டு, கடத்தல் பெரிய அளவில் நடத்தப்பட்டு வருகிறது. இந்நாட்டை அழித்த வங்குரோத்தடையச் செய்த திருடர்களைப் பிடித்து அவர்கள் திருடிய வளங்களை இந்நாட்டின்

கல்வி, சுகாதாரம், விவசாயம் போன்றவற்றிற்கு ஒதுக்குவதே ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதான நோக்கமாகும் என எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

பாடசாலைகளில் குடிநீர் துண்டிக்கப்பட்டாலும் ஜனாதிபதியின் வெளிநாட்டுப் பயணங்களுக்குப் பஞ்சமில்லை.

நாட்டில் 18% VAT வரியை அதிகரித்து ஜனாதிபதி வெளிநாட்டுப் பயணங்கள் செல்வது போலவே 250 மில்லியன் ரூபா செலவழித்து செங்கடலைப் பாதுகாக்க கடற்படையை அனுப்பினாலும்,

பாடசாலைகளால் குடிநீர் கட்டணத்தை கூட செலுத்த முடியாத நிலையை எட்டியுள்ளதாகவும்,வியட்நாமில் தண்டிக்கப்பட்டதைப் போல,ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் வெளிப்படத்தன்மை மற்றும் பாரபட்சமற்ற நீதித்துறை கட்டமைப்பு மூலம் திருடர்கள் பிடிக்கப்பட்டு தண்டிக்கப்படுவார்கள். கமிஷன் இல்லாமல் நேர்மையாகவும் தூய்மையாகவும் மக்களுக்கு சேவை செய்யும் திறன் தனக்கு இருப்பதாகவும், இதற்காக தம்மை சுற்றி பெரும் நன்கொடையாளர்கள் இருக்கின்றனர் என்றும் இங்கு பணம் எதுவும் தனக்கு கிடைக்கப்பெறுவதில்லை என்றும், உரிய உபகரணங்களை மாத்திரமே தாம் பெற்றுக் கொள்வதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

எனவே, ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில், ஒவ்வொரு நிதி பரிவர்த்தனையும் மக்கள் தெரிந்து கொள்ளும் பொருட்டு முன்வைக்கப்படும். தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கோரிக்கைகளை முன்வைக்காமல் தொடர்புடைய தகவல்களை அணுக ஒரு நேரடித் திட்டம் வகுக்கப்படும். ஒவ்வொரு கொள்முதல் திட்டத்திற்கும் பல்தரப்பு அங்கீகாரத்தைப் பெறுவதற்கான வேலைத்திட்டம் தயாரிக்கப்படும் என்றும் சஜித் சுட்டிக்காட்டினார்.

தமிழ் பண்ணையாளர்களுக்கு எதிரான ஆக்கிரமிப்பை

# “அரச இயந்திரம் பாராமுகம்”

## தவிசாளர் நிரோஸ் கடும் குற்றச்சாட்டு

மயிலத்தமடு-மாதவனை பிரதேசத்தில் தமிழ் பண்ணையாளர்களுக்கு எதிரான பேரினவாதிகளின் ஆக்கிரமிப்பை அரச இயந்திரம் தடுக்கவில்லை. மாறாக அதற்கு ஒத்துழைப்பாகவே இருக்கின்றது என்பதனை வெளிப்படுத்துவதற்கு சகல இடங்களிலும் எதிர்ப்பு நடவடிக்கையினை முன்னெடுக்க வேண்டியுள்ளதாக வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தியாகராஜா நிரோஸ் தெரிவித்துள்ளார்.

மேலும், கிழக்கு மாகாணத்தின் மயிலத்தமடு- மாதவனை பிரதேசத்தில் இடம்பெறும் திட்டமிட்ட சிங்களப் போரினவாத ஆக்கிரமிப்பிற்கு எதிராக நாம் போராடுகின்றோம். வரலாற்று ரீதியில் எமது மக்களின் நிலங்கள் திட்டமிட்ட பௌத்த-சிங்கள மயமாக்கத்துக்கு உட்பட்டே வருகின்றன. அதற்கு அரச இயந்திரமும் ஒத்துழைப்பாக இருந்து வருகின்றது. இலங்கையை இனவாதமற்றதாக



அரசாங்கம் வெளியுலகிற்குக் காட்ட எத்தனிக்கும் அதேவேளை, ஆரவாரமற்ற வன்முறைகளின் ஊடாக தமிழ் மக்களின் பூர்வீகத்தினையும் அவர்களது பொருளாதாரத்தையும் அழித்து வருகின்றது.

மயிலத்தமடு விவகாரத்தில் நீதிமன்றத் தீர்ப்புக்கள் நடைமுறைப்படுத்தப்படவில்லை. கால்நடைகள் வன்முறையான மிகக் கொடூரமான முறையில் கொல்லப்படுகின்றன. பண்ணையாளர்கள் தமிழ் மக்கள் என்ற காரணத்தின் அடிப்படையில் அவர்கள் அதிகார பலத்துடன் பேரினவாத நிகழ்ச்சி நிரல் முன்னெடுக்கப்படுகின்றது.

கிழக்கு மாகாணத்தின் ஒரு பகுதியில் நடைபெறும் ஆக்கிரமிப்பு அல்ல இப்பிரச்சினை. அடிப்படையில் தமிழ் மக்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் இனவாத நிகழ்ச்சி நிரலுடனான ஆக்கிரமிப்பு. நாம் வடக்குக் கிழக்கு எமது தாயகம் என்ற வகையில் இன்று யாழில் இந்த ஒடுக்குமுறைக்கு எதிர்ப்பினை வெளிக்காட்டியுள்ளோம். தொடர்ந்தும் மயிலத்தமடுவில் போராடும் மக்களுக்கு ஆதரவாகச் சகல பிரதேசங்களிலும் வெளியுலகின் கவனத்தினை ஈர்ப்பதற்கான பிரதான பிரச்சினைகளில் ஒன்றாக பலதரப்பட்ட போராட்டங்களை முன்னெடுக்க வேண்டிய பொறுப்பு உள்ளது என தெரிவித்துள்ளார்.

# இந்தியாவில் இந்தி கற்பதற்கு உதவித்தொகை

இந்திய அரசின் மனிதவள மேம்பாட்டு அமைச்சகம், 2024-2025ஆம் ஆண்டுக்கான கல்வி அமர்வுக்கு, ஆக்ராவில் உள்ள கேந்திரிய இந்தி சன்ஸ்தானில் (இந்தி மத்திய நிறுவனம்) இந்தி படிப்பதற்காக இலங்கை நாட்டவர்களுக்கு உதவித்தொகையை வழங்குகிறது.

இந்தத் திட்டமானது முழு நிதியுதவியுடன் கூடிய உதவித்தொகையாகும், இதில் தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு திரும்பும் விமான கட்டணம், உதவித்தொகை, விடுதி தங்குமிடம் மற்றும் வருடாந்திர புத்தக மானியம் வழங்கப்படும்.

21-35 வயதுக்குட்பட்ட மற்றும் தொடக்க/ இடைநிலை அளவில் ஹிந்தி படித்த அனைத்து மாணவர்களும் விண்ணப்பிக்க தகுதியுடையவர்கள். இத்திட்டம் தொடர்பான கூடுதல் விவரங்கள் https://hcicolombo.gov.in/what இல் கிடைக்கும் .

இலங்கையைச் சேர்ந்த தகுதியுடைய மாணவர்கள் 26 பெப்ரவரி 2024 அன்று காலை 10 மணி முதல் பிற்பகல் 01 மணி வரை சுவாமி விவேகானந்தா கலாசார நிலையம் (இந்திய கலாசார மையம்), 16/2, கிரிகோரிஸ் வீதி, கொழும்பு 07 என்ற முகவரியில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களுடன் நேர்முக பரீட்சையில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

# பஸ் நிழற்குடை திறந்து வைப்பு

எம்.கிருஸ்ணா

மத்திய மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் நிதியொதுக்கீட்டில் நோட்டன்-ஹட்டன் பிரதான வீதியின் சவுத் வனராஜா பகுதியில் நவீன பஸ்தரிப்பிடம் அமைக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு புதன்கிழமை (17) கையளிக்கப்பட்டுள்ளது.



ஹட்டன் தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் உபதலைவர் எம்.உதயகுமாரின் வேண்டுகோளின் பேரில் மத்திய மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் பாராக்கிரம திசாநாயகவின் பரிந்துரைக்கமைய சுமார் 25 ஆயிரம் நிதி ஒதுக்கீட்டில் மேற்படி பஸ் தரிப்பிடம் அமைக்கப்பட்டுள்ளது.

பஸ் தரிப்பிட திறப்பு விழா நிகழ்வில் ஹட்டன் தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் செயலாளரும் நோர்வூட் பிரதேசசபை முன்னாள் உறுப்பினருமான மு.ராம், நோர்வூட் சமுர்த்தி வங்கி உதவி முகாமையாளர் அணில் பிரசன்ன, வனராஜா பிரதேச சமூர்த்தி உத்தியோகஸ்தர்கள், பிரதேச பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# “மஹிந்தவுடன் இணைய தமிழர்கள் தயாராக இல்லை”

வரீன்ராஜா சவேஷ்



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து ஆட்சியமைக்க தமிழர்களோ, தமிழ் மக்களின் பிரதிநிதிகளோ எந்த விதத்திலும் தயாராக இல்லையென தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு - பட்டிருப்பில் செவ்வாய்க்கிழமை (16) நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“தமிழ் மக்களின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் விரும்பும் ஒரு வேட்பாளரை நிறுத்துவோமென முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறியிருக்கின்றார். ஆயுதப் போராட்டம் 2009இல் மௌனிக்கப்படும்போது, ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட தமிழ் மக்களையும் ஆயிரக்கணக்கான போராளிகளையும், சர்வதேசத்தின் துணைகொண்டு அழித்த ஜனாதிபதியாவார். புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை 13ஆவது திருத்தச் சட்டத்திற்கு மேலே 13 பிளஸ் கொடுப்பேன் என சர்வதேசத்திற்கு ஓர் உத்தரவாத்தத்தைக் கொடுத்து எமது மக்களையும் போராட்டத்தையும் அழித்தார்.

2009இற்குப் பின்னர் தமிழ் மக்களின் முக்கியமான பிரதிநிதித்துவத்தைக் கொண்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் 18 சுற்றுப் பேச்சுவார்த்தைகளைச் செய்து, இறுதியில் ஏமாற்றிய மஹிந்த ராஜபக்ஷ, தமிழ் மக்களுடன் மீண்டும் பேசி ஒரு ஜனாதிபதி வேட்பாளரைக் கொண்டு வருவேன் என கூறினாலும், தமிழ் மக்களோ தமிழ் மக்களின் பிரதிநிதிகளோ அவருடன் இணைந்து ஓர் ஆட்சியை ஏற்படுத்துவதற்கு எந்த விதத்திலும் தயாராக இல்லை.

மேலும், தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினுடைய ஸ்ரீலங்கா பொதுஜனப் பெரமுன கட்சியின் ஆதரவுடனேயே ஜனாதிபதியாக இருக்கின்றார்.

அதள பாதாளத்திற்குச் சென்ற இலங்கையை மீட்பதாக அவர் கூறிக்கொண்டிருந்தாலும் பொதுஜனப் பெரமுனவை விட்டு அவர் இன்னும் வெளியேறவில்லை. ஆனால், அரசியலமைப்பின் பிரகாரம் இந்த வருடம் ஜனாதிபதித் தேர்தல் நடாத்த வேண்டிய கட்டாயம் இருக்கின்றது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை ஜனாதிபதி ஒத்திவைத்தது போன்று ஜனாதிபதித் தேர்தலை ஒத்தி வைக்க முடியாது. இந்நிலையில் பொதுஜனப் பெரமுனவில் இருக்கின்ற பல பாராளுமன்ற உறுப்பினர்கள் ரணில் விக்ரமசிங்கவின் பக்கமும், இன்னும் சிலர் சஜித் பிரேமதாசவின் பக்கமும் சென்றிருக்கின்றார்கள். யாராக இருந்தாலும். இந்த நாட்டை மாறி மாறி ஆட்சி செய்தவர்கள் தமிழ் மக்களுக்கு எவ்வித நன்மைகளையும் செய்யவில்லை” என தெரிவித்துள்ளார்.







# நாக பூசணி அம்மன் ஆலய கும்பாபிஷேகம்

எம்.றொசாந்த்

வரலாற்று சிறப்பு மிக்க நயினாதீவு நாக பூசணி அம்மன் ஆலய மகா கும்பாபிஷேகம் புதன்கிழமை (24) இடம்பெறவுள்ளது.

பிரதிஷ்டா கிரியைகள் புதன்கிழமை (17) ஆரம்பமானது. தொடர்ந்து வரும் நாட்களில் கிரியைகள் இடம்பெற்று, எதிர்வரும் திங்கட்கிழமை (22) காலை 07 மணி முதல் மறுநாள் செவ்வாய்க்கிழமை (23) மாலை 05 மணி வரை அடியார்கள் எண்ணெய் காப்பு சாத்தும் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

அதனை தொடர்ந்து மறுநாள் புதன்கிழமை (24) காலை 09.38 மணி முதல் 11.20 மணி வரையிலான சுப நேரத்தில் மகா கும்பாபிஷேகம் நடைபெறும்.

# பொறியில் சிக்கிய சிறுத்தை

செ.தி.பெருமாள்

மஸ்கெலியா பொலிஸ் பிரிவில் உள்ள க்ளேண்டில் தோட்ட முகாமையாளர் விடுதியை சுற்றியிருக்கும் வேலியில் இனம் தெரியாதோரால் விரிக்கப்பட்ட வலையொன்றில் சிக்கிய சிறுத்தை மீட்கப்பட்டுள்ளது.

சிறுத்தையொன்று வலையில் சிக்கி இருப்பதை கண்ட முகாமையாளர் விடுதியின் பணியாளர், முகாமையாளரின் கவனத்துக்கு கொண்டுவந்ததை அடுத்து, அவர் வன பாதுகாப்பு அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளார்.

அதனைத் தொடர்ந்து நல்லத்தண்ணி வன பாதுகாப்பு அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு விரைந்து சிறுத்தையை மீட்கும் நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.



பொங்கு தமிழ்ப் பிரகடனத்தின்

# 23ஆம் ஆண்டு நினைவு தினம்

எம்.றொசாந்த்



பொங்கு தமிழ்ப் பிரகடனத்தின் 23ஆம் ஆண்டு நினைவு தினம் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் புதன்கிழமை மதியம் 12 மணியளவில் இடம்பெற்றது.

யாழ். பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள பொங்கு தமிழ் நினைவுத் தூபியில் நினைவு தினம் இடம்பெற்றது.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நினைவு தினத்தில் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் மா.இளம்பிறையன், பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினர், மாணவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

கடந்த 2001ஆம் ஆண்டு இதே நாளில் இடம்பெற்ற பொங்குதமிழில் தமிழ் மக்களின் அபிலாசைகளான, சுயநிர்ணய உரிமை, மரபுவழித் தாயகம், தமிழ்த் தேசியம், என்பன அங்கீகரிக்கப்பட வேண்டும் என பிரகடனம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# நீராடிய சிறுவனை கௌவிய முதலை

களனி கங்கையில் நீராடிக் கொண்டிருந்த சிறுவனை முதலையொன்று கௌவி இழுத்துச் சென்றுள்ள சம்பவமொன்று கடுவலையில் செவ்வாய்க்கிழமை (16) இடம்பெற்றுள்ளது.

கடுவெல, வெலிவிட்ட புனித அந்தோனி டிஸ்ன பெரேரா (வயது 9) என்ற சிறுவனையே இவ்வாறு முதலை இழுத்துச் சென்றுள்ளது.

தனது பாட்டியுடன் குளிப்பதற்கு சிறுவன் சென்றுள்ளதாகவும் பாட்டி துணி துவைக்கும்வரை சிறுவன் நீராடிக் கொண்டிருந்தபோது, திடீரென பாய்ந்த முதலை சிறுவனைக் கௌவிக்கொண்டு போயுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

கடுவெல பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து, சம்பவ இடத்திற்குச் விரைந்த போதும் முதலையின் வாயில் சிறுவன் சிக்கிக் கொண்டிருப்பதையும் அந்த முதலை ஆற்றின் மேல் பரப்பிற்கு பலமுறை வந்து தலையை உயர்த்திச் சென்றுள்ளதையும் அங்கிருந்தவர்கள் கண்டுள்ளனர்.

# பெப்ரவரி 23 அன்று கச்சத்தீவு திருவிழா

எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம் - கச்சத்தீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழா பெப்ரவரி மாதம் 23ஆம் திகதி இடம்பெறவுள்ளது. அதற்கான முன்னாயத்த பணிகள் குறித்து ஆய்வு செய்யும் விஜயமொன்று செவ்வாய்க்கிழமை (16) முன்னெடுக்கப்பட்டது.

இந்த விஜயத்தில் நெடுந்தீவு பங்குத்தந்தை அருட்பணி பத்திநாதன் அடிகளார், யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர்(காணி), நெடுந்தீவு பிரதேச செயலாளர் எப்.சி.சத்தியசோதி, யாழ் மாவட்ட செயலக பிரதம கணக்காளர், மற்றும் கடற்படை உயரதிகாரிகள் இணைந்திருந்தனர்.

குறிகாட்டுவான் துறைமுகத்தில் இருந்து கடற்படை படகு மூலம் கச்சத்தீவு சென்ற குழுவினர் அங்கு திருவிழாவிற்கு வரும் பக்தர்களது தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் எடுக்கவுள்ள விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்துள்ளனர்.



# வினாத்தாள்களை கசியவிடுவதால் தள்ளிப்போகும் எதிர்காலம்

நாட்டிலிருந்து இலவச கல்வி மலையேறும் காலம் வெகு தொலைவில் இல்லை என்பதையே சில சம்பவங்கள் உணர்த்தி நிற்கின்றன. உழைக்கும் பணத்தில் பெரும்பாலான பங்கை, தங்களுடைய பிள்ளைகளின் கல்விக்கே பெரும்பாலான பெற்றோர் செலவழிக்கின்றனர்.

அதனால்தான், தற்போதைய போட்டிக் கல்வி முறையில் அரசாங்கம் பாடசாலைக் கல்விக்காகச் செலவிடும் தொகையை விட 30 சதவீதத்தைப் பெற்றோர்கள் பிரத்தியேக வகுப்புகளுக்குச் செலவிட வேண்டியுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

“பொதுவாக ஒரு பிள்ளையின் கல்விக்காக 20,000 ரூபாயை பெற்றோர் மாதாந்தம் செலவழிக்கின்றனர். நம் நாட்டில் 5.7 மில்லியன் குடும்பங்கள் உள்ளன, பெற்றோர்கள் கல்விக்காக சுமார் ரூ.121 முதல் ரூ.122 பில்லியன் வரை செலவிடுகின்றர் எனவும் தெரிவித்துள்ளார்.

இலவச கல்விக் கொள்கை இருந்தாலும், அரச பாடசாலைகளில் ஒரு சில பாடசாலைகளைத் தவிர ஏனைய பாடசாலைகளில், பூசி மெழுகப்படுகின்றது. மாணவர்கள் பலரும், தனியார் வகுப்புகளுக்குச் சென்றே பரீட்சைகளில் தோற்றிச் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்கின்றனர்.

இந்நிலையில், கொரோனா காலத்தில் உரிய அட்டவணையின் பிரகாரம் பரீட்சைகளை நடத்தமுடியாத நிலைமை ஏற்பட்டமையால், ஓரிரு ஆண்டுகள் பின்னோக்கிப் போகவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இது பரீட்சைக்குத் தோற்றவேண்டிய வயதை விடவும் இரண்டொரு வயதை அதிகரித்தது. இதனால், வெளிநாட்டு புலமைப்பரிசில்களுக்கு விண்ணப்பிக்க வேண்டிய வயதெல்லை தாண்டிவிட்டது.

முக்கியமான தடைத்தாண்டல் பரீட்சைகளான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரம் மற்றும் உயர்தரம் ஆகிய பரீட்சைகளை இன்னமும் உரிய காலப்பகுதிக்குள் நடத்தமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. இதனால், தனியார் கல்வி நிலையங்களுக்குப் பெற்றோரால் செலவிடும் தொகையும் கூடிக்கொண்டே போகின்றது.

ஒரே தடவையில் மிகச் சிறப்பாக சித்தியெய்திட வேண்டுமென இராபகல் பாராது கடுமையாக கல்விப்பயிலும் மாணவர்கள், பரீட்சை பிற்போடப்படுவதால் மன ரீதியில் பாதிப்புகளுக்கு உள்ளாகின்றனர். ஆகையால், உரிய கால அட்டவணைக்கு ஏற்ப தேசிய பரீட்சைகளை நடத்துவதே சிறந்தது.

இதற்கிடையே, தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் உயர்தர பரீட்சையில் விவசாய விஞ்ஞானத்தின் இரண்டாம் வினாத்தாள் பரீட்சைக்கு முன்பே கசிய விடப்பட்ட சம்பவத்தால், அப்பரீட்சையை மற்றொரு தினத்தில் நடத்த வேண்டிய நிலைமை இலங்கை பரீட்சைகள் திணைக்களத்துக்கு ஏற்பட்டுள்ளது.

கசிய விட்ட வினாத்தாள்களுக்குப் பதிலாக மட்டுமன்றி, அதன் முதலாம் வினாத்தாளுக்கும் மீண்டும் பரீட்சை நடத்தப்படவுள்ளது. இதுவும், அந்தப் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கு உளவியல் ரீதியில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

வினாத்தாள் கசியவிடப்பட்டமையால், பாடசாலைகளில் மூன்றாம் தவணை ஆரம்பமாகும் தினமும் பின் தள்ளப்பட்டுள்ளது. இதனால், பாடசாலை மாணவர்களும் பாரிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கவேண்டிய நிலைமைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். ஆகையால், வினாத்தாள்களைப் பாதுகாக்கும் முறைமையால் அதிரடியான மாற்றங்களை மேற்கொள்ளவேண்டும். அத்துடன் பரீட்சை மத்திய நிலையங்களிலும் கடுமையான கட்டுப்பாடுகளை விதிக்கவேண்டும்.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம்.
எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம்.
கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

கனவு நிலை அழிந்து போய்விடும். நனவு நிலையே இயற்கையான உண்மை நிலை. கனவுகளில் மட்டும் வாழ முடியாது.

பல அறிஞர்கள் தங்கள் எண்ணங்களை நிஜமாக்கினார்கள். அவை அவர்களின் அறிவினாலும் தொடர் முயற்சியாலும் நிறைவேறின. ஆனால் எந்த முயற்சியையும் செய்யாது, கனவுகளை மட்டும் நம்பி வாழ்பவர்களை என்ன செய்வது?

நிழல் எப்படி நிஜமாகும்? எங்களின் நிழல்கூட சிறிது அசைந்தால் மாறிவிடுகின்றது. இருட்டில் ஏது நிழல்? ஒவ்வொரு நாளும் பற்பல கனவுகள், போகாத இடங்களில் பயணம் செய்து சுற்றித் திரிகின்றது.

உண்மையில் மனிதன் வாழவேண்டும். இடையிடையே தோன்றி, மறையும் காட்சிகளில் மயங்கக்கூடாது. இதுவும் ஒரு மாயநிலை.

தேவையற்ற நினைவுகளைத் தூக்கித் தூக்கி எறிக. அதிகமாக ஆசைப்படக் கூடாது. உங்களை நீங்கள் நம்பாமல் எதுவுமே முழுமையாகாது. நிஜவாழ்க்கையில் புகுவதே சுலபமான முன்னேற்றம்.

நன்றி–பருத்தியூர் பாலை. வயிரவநாதன்

# இந்தியா- மாலைத்தீவுக்கு இடையில் காணாமல் போகும் அமைதி

இந்தியா மாலைத்தீவு உறவில் விரிசல் ஏற்பட்டுள்ள நிலையில், திடீரென மாலைத்தீவு ஜனாதிபதி இந்தியாவுக்கு எதிராகக் கடுமையாக நடந்து கொள்ள ஆரம்பித்துள்ளார். இதற்கான காரணங்களை நாம் பார்க்கலாம். இந்தியா–மாலைத்தீவு இடையே மோதல் அதிகரித்து வரும் நிலையில், மாலைத்தீவில் உள்ள படைகளை எதிர்வரும் மார்ச் 15ஆம் திகதிக்குள் இந்தியா திரும்பப் பெறவேண்டும் என்ற மாலத்தீவு ஜனாதிபதி முகமது முய்ஸு கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த சில காலமாகவே இந்தியா மாலைத்தீவு இடையேயான உறவு கடுமையாகப் பாதித்துள்ள நிலையில், இது முக்கியமானதாகப் பார்க்கப்படுகிறது. இதற்கான காரணம் என்ன. இப்போது இந்த அறிவிப்பு வர என்ன காரணம் என்பது குறித்து நாம் பார்க்கலாம்.

### இந்தியா மாலைத்தீவு உறவு:

இப்போது மாலைத்தீவில் 88 இந்திய வீரர்கள் உள்ளனர். இந்தியா மாலைத்தீவு இடையே கடந்த 2010இல் போடப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்தியப் படைகள் மாலைத்தீவில் நிறுத்தப்பட்டன. மருத்துவம் தொடங்கிப் பல வழிகளில் அங்குள்ள மக்களுக்கு இந்தியா உதவி வருகிறது. இரு நாடுகளுக்கும் இடையே இத்தனை ஆண்டுகளாக இருந்த நல்லுறவு கடந்த சில காலமாகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டு இருக்கிறது.

இதற்கு முன்பு மாலைத்தீவு ஜனாதிபதியாக இருந்தவர் இந்தியா சார்பு நிலைப்பாட்டை எடுத்திருந்தார். ஆனால், தற்போதைய ஜனாதிபதி முய்ஸு இந்தியா சார்பு நிலைப்பாட்டில் இருந்து விலகி, சீனா ஆதரவு நிலைப்பாட்டை எடுத்துள்ளார்.

அவர் தனது பிரசாரத்திலேயே “இந்தியா அவுட்” என்ற பிரசாரத்தை முன்னெடுத்திருந்தார். தற்போதைய ஜனாதிபதி முய்ஸு, சீன ஆதரவு நிலைப்பாட்டைக் கொண்டவராகவே இருக்கிறார்.

### கெடு விதிப்பு:

இந்தச் சூழலில் தான் அவர் இந்தியா இராணுவத்தை வெளியேறக் கெடு விதித்துள்ளார். மாலைத்தீவில் மீட்புப் பணிகளை மேற்கொள்ள இரண்டு இராணுவ துருவ் “அட்வான்ஸ்ட் லைட்” ஹெலிகொப்டர்களை இந்தியா மாலைத்தீவுக்கு பரிசாக அனுப்பி இருந்தது. இந்த விவகாரத்தில் கடந்த 2021இல் இரு நாடுகளுக்கும் இடையே ஒப்பந்தமும் கையெழுத்தானது. அதன் பின்னர் அந்த ஹெலிகொப்டர்களை பராமரிக்கவும் இயக்கவும் இந்திய இராணுவம் அங்கே இருந்தது.

இருப்பினும், இதை அனுமதித்தால் இந்திய இராணுவம் அங்கே தனது கடற்படை அமைக்கும் என்ற விமர்சனங்களும் எழுந்தன. இதையே தான் தேர்தல் சமயத்திலும் முய்ஸு தனது பிரச்சாரத்தில் முன்னெடுத்து வெற்றி பெற்றார். இப்படிப்பட்ட நேரத்தில் தான் பிரதமர் மோடியின் லட்சத்தீவு பயணம் தொடர்பாக மாலைத்தீவு அமைச்சர் சில சர்ச்சை கருத்துகளைக் கூறியிருந்தனர் இதுவே இரு நாடுகளுக்கும் இடையேயான உறவைக் கடுமையாகப் பாதித்தது.

### சீன பயணம்

மேலும், மாலைத்தீவு ஜனாதிபதி முய்ஸு சமீபத்தில் தான் சீனாவுக்குச் சென்று திரும்பினார். இந்தியப் பெருங்கடலில் அதன் இருப்பை அதிகரிக்க மாலைத்தீவில் தனது செல்வாக்கை விரிவுபடுத்தச் சீனா திட்டம் போடுகிறது.

சீனாவுக்குச் செல்லும் எண்ணெய்யில் சுமார் 80 சதவிகிதம் மாலைத்தீவு அருகே தான் செல்கிறது. இதன் காரணமாகவே மாலைத்தீவைத் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வரச் சீனா விரும்புகிறது. மாலைத்தீவு ஜனாதிபதி முய்ஸு சீனா சென்றபோது, 20 முக்கிய ஒப்பந்தங்களும் கையெழுத்தானது குறிப்பிடத்தக்கது. அவர் சீனாவில் இருந்து திரும்பிய சில நாட்களிலேயே இந்திய இராணுவத்தை வெளியேறிய உத்தரவிட்டுள்ளார். இதையும் பலரும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்திய இராணுவத்தை வெளியேற்ற முய்ஸு உத்தரவிட்டுள்ள போதிலும், இந்த விவகாரத்தில் இந்திய வெளியுறவு அமைச்சகம் எந்தவொரு கருத்துகளையும் கூறவில்லை. சீனாவுக்கும் மாலைத்தீவுக்கும் இடையே நெருக்கம் அதிகரித்து வருவது இந்தியப் பெருங்கடல் பகுதியில் இந்தியாவுக்குச் சிக்கலைத் தரலாம். என்பதே இப்போது வல்லுநர்களின் எச்சரிக்கையாக இருக்கிறது.

> **“ பிரதமர் மோடி குறித்து வெளியான கருத்துகள் அரசின் கருத்துகள் அல்ல. அது தனிப்பட்டவர்களின் கருத்து. இதில் சம்பந்தப்பட்ட 3 அமைச்சர்கள் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்**

பிரதமர் மோடி சமீபத்தில் லட்சத்தீவு சென்றார். லட்சத்தீவில் ஆழ்கடல் நீச்சல் பயிற்சியிலும் பிரதமர் மோடி ஈடுபட்டார். இது தொடர்பான புகைப்படங்களை அவர் தனது சமூக வலைத்தளங்களில் வெளியிட்டு இருந்தார்.

பிரதமர் மோடியின் இந்த பதிவை மாலைத்தீவை சேர்ந்த சில அரசியல்வாதிகள், மிகவும் கீழ்த்தரமாக விமர்சித்து இருந்தனர்.

குறிப்பாக மாலைத்தீவு அமைச்சர்களான மல்ஷா ஷரீப், மரியம் சியூனா மற்றும் அப்துல்லா மசூம் மஜித் ஆகியோரும் விமர்சித்து இருந்தனர்.

பிரதமர் மோடியை இழிவாக விமர்சித்தது கடும் சர்ச்சையை ஏற்படுத்தியது. மாலைத்தீவு நாட்டின் முன்னாள் ஜனாதிபதிகளான முகமது நஷீத், இப்ராகிம் முகமது சோலிக் மற்றும் பல்வேறு தரப்பினர் கண்டனம் தெரிவித்தனர்.

மாலைத்தீவு அமைச்சர்கள் கூறிய கருத்துக்களால் இந்தியா-மாலைத்தீவு இடையே நல்லுறவு பாதிக்கும் சூழல் ஏற்பட்டது.

### மாலைத்தீவு சர்ச்சை:

ஏற்கனவே, சீனாவுக்கு ஆதரவானவராக மாலைத்தீவு ஜனாதிபதி முகம்மது முய்ஸு அறியப்படும் நிலையில், தற்போது அவரது அமைச்சர்கள் இந்தியப் பிரதமர் மோடியை விமர்சித்தது பெரும் சர்ச்சையானது. இதையடுத்து விளக்கம் அளித்த மாலைத்தீவு அரசு, “பிரதமர் மோடி குறித்து வெளியான தரக்குறைவான கருத்துகள் அரசின் கருத்து அல்ல. அது தனிப்பட்டவர்களின் கருத்து. இதில் சம்பந்தப்பட்ட 3 அமைச்சர்கள் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்” என்று கூறியது.

மாலைத்தீவு அமைச்சர்களின் கருத்து சர்ச்சையான நிலையில், இந்தியர்கள் பலரும் மாலைத்தீவு பயணத்தை கேன்சல் செய்தனர். சமூக வலைத்தளங்களில் மாலைத்தீவுக்கு எதிரான பதிவுகள் டிரெண்ட் ஆனது. சுற்றுலாத்துறை மூலம் கிடைக்கும் வருவாயைப் பெருமளவு நம்பியிருக்கும் மாலைத்தீவுக்கு இது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இந்த நிலையில், சீனாவின் உதவியை மாலைத்தீவு ஜனாதிபதி முகம்மது முய்ஸு நாடியுள்ளார்.

### வளர்ச்சியின் பங்காளியாக சீனா:

சீனாவுக்கு ஐந்து நாள் பயணமாக மாலைத்தீவு ஜனாதிபதி முகம்மது முய்ஸு சென்றார். தனது பயணத்தின் 2ஆவது நாளன்று மாலைத்தீவு தொழில் மன்றத்தில் உரையாற்றினார்.

அப்போது, “மாலைத்தீவின் நெருங்கிய கூட்டாளியாக சீனா உள்ளது. எங்கள் வளர்ச்சியின் முக்கிய பங்காளியாகவும் சீனா உள்ளது” என்றார்.

மாலைத்தீவு வரலாற்றில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த உட்கட்டமைப்புகளை எல்லாம் சீனா மேற்கொண்டு வருகிறது. மாலைத்தீவுகளுக்கு சுற்றுலாப் பயணிகள் வருவதைச் சீனா ஊக்குவிக்க வேண்டும்” என்றார். மாலைத்தீவு சுற்றுலாவை மேம்படுத்தும் விதமாக இரு நாடுகளுக்கும் இடையே 50 மில்லியன் டொலர் மதிப்பிலான திட்டங்களும் கையெழுத்தாகியுள்ளது.

இதனால், இருநாடுகளுக்கும் இடையில் இருந்த அமைதி,கொஞ்சம் கொஞ்சமாக காணாமல் போய்க்கொண்டிருக்கின்றது என்பது மட்டுமே உண்மையாகும்.

(நன்றி: ஒன்இந்தியா)

## கடிதங்கள்

### வங்கி வேண்டுமென மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி -அக்கராயன் பகுதியில் இலங்கை வங்கி கிளை இயங்க வேண்டும் என்ற கோரிக்கை கடந்த 10 ஆண்டுகளாக நிறைவேறாமல் உள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் உப நகரங்களில் ஒன்றான அக்கராயனில் 2010ஆம் ஆண்டில் மீள் குடியேற்றம் நடைபெற்ற போது வீட்டுத் திட்டங்கள் வழங்கப்பட்டது இந்தநிலையில், 20 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள கிளிநொச்சி நகரத்திற்குச் சென்றே அக்கராயன் மக்கள் வங்கித் தேவைகளைப் பெற்று வருவதாகத் தெரிவித்துள்ளனர்.

இலங்கை வங்கியின் கிளை ஒன்றினை அக்கராயனில் திறப்பதன் ஊடாக வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான்குளம், கந்தபுரம், முக்கொம்பன், கண்ணகைபுரம், கோணாவில், யுனியன்குளம், அமைதிபுரம், ஆரோக்கியபுரம், அம்பலப்பெருமாள்குளம் ஆகிய கிராமங்களில் வாழ்கின்ற 5,000இற்கு மேற்பட்ட குடும்பங்கள் தமது வங்கிச் சேவைகளை இலகுவாக பெற்றுக்கொள்ள முடியும்.

மேலும், அக்கராயன் உப நகரத்தில் பாடசாலைகள், வைத்தியசாலை, பொலிஸ் நிலையம், கமநல சேவை நிலையம், எரிபொருள் நிலையம் உட்பட சகல நிறுவனங்களும் வங்கித் தேவைகளுக்காகக் கிளிநொச்சிக்கே செல்கின்றனர்.

இந்நிலையில், அக்கராயனில் இலங்கை வங்கி கிளை ஒன்றினை திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் படி பொது அமைப்புகள் வேண்டுகோள் விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

– நடராசா கிருஸ்ணகுமார்



# பழுதற்ற உலகை விட்டுச் செல்வோம்

ஏ.எச்.ஏ.
ஹுஸைன்

**காலத்துக்கு காலம் அவ்வப்போது சுழற்சியாக இடம்பெறும் இயற்கை, செயற்கை இடர், அழிவு நாச வேலைகள் என்பனவற்றுக்காக நிவாரணம் வழங்குவதும் நிவாரணத்தைப் பெறுவதும் மாத்திரம் நமது பணியாக இருக்கக் கூடாது என சுற்றுச் சூழல் சமூகப் பொருளாதார அபிவிருத்திக்காகப் பாடுபடும் தன்னார்வ உதவு ஊக்க அமைப்பான இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் இணைப்பாளர் தங்கராஜா திலீப்குமார் சமூகம் சார் வேண்டுகோளை விடுத்துள்ளார்.**

சமீபத்திய சீரற்ற வானிலை, அடைமழை பெருவெள்ளம் தொடர்பாக மக்கள் நிர்க்கதிக்குள்ளாகியிருப்பது குறித்து அவர் விடயங்களைக் குறிப்பிட்டுக் காட்டினார். பாதிக்கப்பட்ட பின்னர் அரசாங்கமும் அரச சார்பற்ற நிறுவனங்களும் நிவாரணம் வழங்கும் கலாசாரத்தையும், மக்கள் நிவாரணங்களைப் பெற முண்டியடிக்கும் கலாசாரத்தையும் மாற்றியமைக்க வேண்டும்.

அழிவுகள் இடம்பெறுவதற்கு முன்னர் அவதானமாக இருந்து அந்த அழிவுகளை முன்னாயத்தமாக முறியடிக்கும் யுக்தித் திட்டமிடல் அனைத்துத் தரப்பிலும் இருக்க வேண்டும்.

துரதிருஷ்டவசமாக முன்னாயத்தம், முன்னெச்சரிக்கை, தற்காப்பு என்பன போன்ற விடயங்களில் இன்னமும் மக்கள் தயார்படுத்தப்படாத நிலையில் இருந்து கொண்டிருக்கின்றார்கள்.



காலாகாலமாக எதிர்கொள்ளும் வெள்ளம், வறட்சி போன்ற இயற்கை இடர்களுக்கும், அவ்வப்போது மனிதனால் உண்டாக்கப்படும் மனித நாச அழிவு வேலைகளையும் தடுக்கக் கூடிய யுக்தித் திட்டமிடல் பொறிமுறைகளைக் கைக்கொள்ள வேண்டும். இதில் எல்லோரும் ஈடுபட வேண்டும்.

எல்லோரும் என்று கூறும்போது இளைஞர்கள், பெற்றோர்கள் மாணவர்கள் ஆசிரியர்கள் அதிபர்கள், நிறுவனங்களைச் சார்ந்தோர்கள். பொலிஸார், சுகாதாரத் துறையினர், திணைக்களங்கள் கூட்டுத்தாபனங்களைச் சேர்ந்தவர்கள், மத அமைப்புக்களைச் சார்ந்தவர்கள், விளையாட்டுத்துறையைச் சார்ந்தவர்கள் என்பதோடு முக்கியமாக அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் இதில் உள்ளடங்குவார்கள்.

எல்லோருமாக ஒருங்கிணைந்தால்தான் இந்த இயற்கையைச் சீரமைத்து அது உண்டாக்கும் அபாயத்திலிருந்து வெளிவர முடியும்.

இயற்கையோடு இணைந்த வாழ்க்கை இப்பொழுது அருகி வருகிறது. இயற்கை மனிதனுக்கு வாழ்வளிக்கிறது. வாழ்வைக் கற்றுக்கொடுக்கிறது. இயற்கை இல்லை என்றால் மண்ணில் ஈரமில்லை விளைச்சலில்லை அறுவடையில்லை மனித வாழ்க்கை இல்லை. ஏன் உயிரினங்களும் கூட இல்லை.

இயற்கைதான் உயிரினங்கள் ஒன்றையொன்று சார்ந்து வாழும் வாய்ப்பை வழங்கி வருகிறது.

இயற்கையாகவோ அல்லது செயற்கையாகவோ ஏற்படுகின்ற இடர் அபாயங்களைக் கண்டறிந்து சமூகத்திலும், தேசத்திலும் பாதுகாப்பு பயன்பாடு ஒன்றை உருவாக்கி பாரிய அளவில் சமூகத்தில் நின்று நிலைக்கக் கூடிய அபிவிருத்தியை மேற்கொள்ள வேண்டும் என்பதே எதிர்பார்ப்பாகும்.

இடர்கள் எல்லா அபிவிருத்தி நடவடிக்கைகளிலும் பாரதூரமான அச்சுறுத்தல்களை நிலைக்கச் செய்கின்றது. அழிவாக உயிர்ப்பலிகளும், ஏனைய சேதங்களும் ஏற்படுகின்றன. சிலபோது பௌதீக, சூழல் பொருளாதார நாசங்களும் உண்டாகின்றன. அவை சமூக உறுதிப்பாட்டினை வலுவிழக்கச் செய்வதோடு இடர்களை எதிர்கொண்டுள்ள மக்களின் வாழ்வாதாரம் முற்றாக பாதிப்படைந்து மீண்டும் பழைய நிலைக்கு திரும்புவது மிகவும் கடினமானதொன்றாக மாறிவிட்டிருப்பதையே கடந்த கால அனுபவங்களில் கண்டிருக்கின்றோம்.

எதிர்கால சந்ததிக்கு பாதுகாப்பான, பழுதற்ற உலகை விட்டுச் செல்வோம் என்ற எண்ணத்துடன் ஆர்வலர்கள் அங்கலாய்க்கிறார்கள் ஆதங்கப்படுகின்றார்கள். அதுவே முதன்மைப் பணியாக இருக்க வேண்டும்" என்றார்.

சுவீடன் சர்வதேச அபிவிருத்திக்கான ஒத்துழைப்பு (வீ எபெக்ற்) நிறுவனத்தின் நிதி அனுசரணையில் இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனம் கூட்டுறவுத்துறை சார்ந்த திட்டங்களையும், பெண்கள் வலுவூட்டலோடு அபிவிருத்திகளை உறுதிப்படுத்தும் வகையில் பயிற்சிகள், செயலமர்வுகள், விழிப்புணர்வுகள், தொழில்துறை உற்பத்திக் கண்காட்சிகள், கற்றல் கள விஜயங்கள், பொருளாதார வாழ்வாதார உதவு ஊக்கங்கள் என்பனவற்றை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இளைஞர் அபிவிருத்தி அகம் 2012ஆம் ஆண்டு தொடக்கம் செயலாற்றி வருகின்றது.





# ரஜனி டீச்சர்



இரா. சிவலிங்கம்
கொட்டகல

லிந்துல பெயாவெல் தோட்டத்திலிருந்து ஸ்ரீபாத கல்வியற் கல்லூரிக்குத் தெரிவுச் செய்யப்பட்ட ரஜனி மிகவும் உற்சாகத்தோடு புறப்பட்டுக் கொண்டிருந்தாள். காலை வெயில் கூரையின் ஓட்டை வழியாக வந்து கொண்டிருந்தது. தன் வீட்டுக்கு முன்னிருக்கும் தேயிலைச் செடிகள் எல்லாம் பனியில் நனைந்து நடுங்கிக் கொண்டிருந்தது. அந்த தேயிலைச் செடிகளைப் பார்க்கும் போது தன்னுடைய நான்கு பரம்பரைக்கு மேல் அந்த தோட்டத்திலேயே வாழந்து கொண்டிருப்பதை நினைத்துப் பார்க்கிறாள்.

தோட்டம் என்றதும் வெள்ளைக்காரத் துரைமார்களின் அடிமை முறைகளும், அடக்கு முறைகளும் பற்றித் தன்னுடையத் தாத்தா சொன்னக் கதைகளும், புத்தகங்களில் படித்தது ஞாபகம் வருகிறது. தாத்தா அடிக்கடி பாடும் பாடல்கள் "கூனி அடிச்ச மல கோப்பிகன்னு போட்டமல அண்ணன தோத்தமல அந்தோ தெரியுது பார்......!"

தன்னுடைய நான்கு பரம்பரைக்குப் பின் முதன் முதலாக ஆசிரியர் தொழிலுக்குப் போகும் ரஜனிக்குப் பல கனவுகள் மனதில் தோன்றி மறைகின்றன. ஆசிரியர் பயிற்சிக்காகச் செல்லும் நான் ஒரு நல்ல ஆசிரியராக வர வேண்டும். சமூகத்திற்குச் சேவை செய்ய வேண்டும். குறிப்பாகப் பெண்களுக்குக் கல்விப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். போன்ற பல கனவுகளோடு ஸ்ரீபாத கல்வியற் கல்லூரிக்கு செல்கின்றாள்.

ஸ்ரீபாத கல்வியற் கல்லூரி 1985 ஆம் ஆண்டு ஜேர்மனி அரசாங்கத்தால் அமைத்துக் கொடுக்கப்பட்டது. அந்த கட்டிடங்களின் அமைப்பும், தோற்றமும், அதன் சூழலும் ரஜனிக்குப் பிடித்துப் போய்விட்டது. இந்த பகுதியிலேயே இலங்கையின் பிரசித்திப் பெற்ற டென், சென்கிளயர் நீர் வீழ்ச்சிகள் காணப்படுகின்றன. இந்தப் பிரதேசம் உல்லாசப் பிரயாணிகளை கவரும் பிரதேசம் ஆகும். இங்கு இருக்கும் தேநீர் வழங்கும் இரண்டு நிலையங்களும் மிகவும் பிரசித்திப் பெற்றது. துரதிஷ்டவசமாக இதுவரையிலும் எந்த தோட்டத் தொழிலாளர்களும் இதில் தேநீர் அருந்திய வரலாறு இல்லை. இங்குதான் பத்தனை புல்நிலம் இருப்பதோடு, மேற் கொத்மலைத் திட்டத்திற்கு அருகாமையிலும் அமைந்துள்ளது. ஆசிரியர் பயிற்சிக் காலத்தில் இருக்கும் பொழுது காதல், பொழுது போக்கு, , பகிடிவதை, ஏனைய சில்மிசங்கள் எனக் காலத்தை வீணடிக்காது ஆசிரியர் பயிற்சியை முடித்து கொண்ட ரஜனி கல்லூரியிலேயே சிறப்பான சித்திகளைப் பெற்று வெளியேறுகின்றாள்.

ரஜனி கட்டுறு பயிலுனராக ஒரு பிரபல நகர பாடசாலைக்கு நியமனத்தைப் பெற்றுச் செல்கின்றாள். தன் வீட்டிலிருந்து கிட்டத்தட்ட இருபது கிலோ மீட்டர் தூரம் ஒரு வருட கட்டுறு பயிற்சியை முடித்துக்கொண்ட ரஜனிக்கு பின் தங்கியப் பிரதேசத்தில் இருக்கும் ஒரு தோட்டப் பாடசாலைக்கு ஆரம்ப கல்வி ஆசிரியராக முதல் நியமனம் கிடைக்கின்றது. நூறு மாணவர்கள் மட்டுமே அந்த பாடசாலையில் இருந்தார்கள். ரஜனியுடன் சேர்த்து ஐந்து ஆசிரியர்கள். ரஜனிக்கு வழங்கப்பட்ட வகுப்பு தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றவிருக்கும் வகுப்பு, கிட்டத்தட்ட பதினேழு மாணவர்கள் அந்த வகுப்பில் இருந்தார்கள். எல்லோரும் தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகள்.

முதல் நாள் பாடசாலையில் ரஜனியுடன் கதைத்த ஒரு ஆசிரியர் "டீச்சர் இந்த புள்ளைங்க ஒன்னும் ஒழுங்கா படிக்காது, பெற்றோரும் அக்றையே இல்லை, இதுகளுக்கு படிச்சு கொடுத்து வேளை இல்லை. நீங்க ஒன்றும் அலட்டிக்காதீங்க. என சொல்லி விட்டு வாங்க டீச்சர் சாப்பிடுவோம் எனக்குப் பசிக்குது." என சொல்லிக் கொண்டே ஏனைய ஆசிரியர்களை கூப்பிட்டார். ரஜனி தன்னுடைய கைக்டிகாரத்தைப் பார்த்து தனக்குள்ளேயே பல கேள்விகளை கேட்டுக் கொண்டாள்.

முதல் நாள் தன்னுடைய ஆசிரியர் பணியை அப் பாடசாலையில் தரம் ஐந்து வகுப்பிற்கு தொடங்குகின்றாள். தனக்குப் பாரியப் பொறுப்பு வழங்கப்பட்டதை உணர்ந்து இந்த பிள்ளைகள் அனைவரையும் எப்படியாவது சித்திப் பெற வைக்க வேண்டும் என உறுதியோடு படிப்பிக்க ஆரம்பிக்கின்றாள். அடுத்த வாரத்திலேயே பெற்றோரை அழைத்து கலந்துரையாடுகின்றாள். பின்னர் தனது ஆசிரியர் நண்பர்கள், நலன் விரும்பிகள், பழைய மாணவர்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள், தொழிற்சங்க வாதிகள், சமூக ஆர்வலர்கள் என பல்வேறு மட்டத்திலிருந்தும் தனி நபர்களையும், குழுக்களையும் அழைத்து கலந்துரையாடல்களை நடத்துகின்றாள்.

பிள்ளைகளக்குத் தேவையானக் கொப்பிகள், கற்றல் உபகரணங்கள், பரீட்சை வினாத்தாள்கள் ,மேலதிக வகுப்புக்கள் என பல விடயங்களை அப்பிள்ளைகளுக்காக ஆரம்பிக்கின்றாள். அப்பாடசாலையிலுள்ள ஏனைய ஆசிரியர்களின் போட்டிக்கும், பொறாமைக்கும், கோபத்திற்கும், ஏலன பேச்சுக்கும் ஆளாகியதோடு தேவையற்ற விடயங்களை எல்லாம் கதைக்கவும் தொடங்குகின்றார்கள்.

ஒரு நாள் ரஜனி டீச்சரை அதிபர் தன் அறைக்கு அழைத்து," டீச்சர், நீங்க, இந்த பாடசாலைக்குப் புதுசு, நீங்க இளம் ஆசிரியர், வேற வயசு கோளாறு நிறைய இருக்கும். இப்ப துடிப்பு, வைராக்கியம், வீரம், புரட்சி எல்லாம் இருக்கும். உதாரணத்திற்கு நீங்க ஒரு புது தும்புத் தடி மாதிரி போக போக நீங்க எங்களை மாதிரி ஆகிவிடுவிங்க. நாங்களும் ஒரு காலத்தில் அப்படித்தான் இருந்தோம். அப்புறம் எங்களை மாதிரி கிலாஸ்

> **முதன் முதலாக ஆசிரியர் தொழிலுக்குப் போகும் ரஜனிக்குப் பல கனவுகள் மனதில் தோன்றி மறைகின்றன. ஒரு நல்ல ஆசிரியராக வர வேண்டும். பெண்களுக்குக் கல்விப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். போன்ற கனவுகளோடு செல்கின்றாள்.**

பக்கம் கூட போக மாட்டிங்க. அதனால் நீங்க கொஞ்சம் நிதானமாக இந்த பாடசாலையில் நடந்து கொள்ளுங்க. மத்த டீச்சர்களை பகைச்சுகாதீங்க.

சில பெற்றோர்களும் ஒங்க மேல கொம்லைன் கொடுத்து இருக்காங்க. பின்னேரத்தில் தொடர்ந்து கிலாஸ் செய்றிங்களாம். பிள்ளைகள் எல்லாம் தினமும் லேட்டாகி வீட்டுக்கு போறாங்களாம். சின்ன புள்ளைங்களை பசியோடு படிக்கச் சொல்றிங்களாம். நெனச்சமாதிரி வெளியாட்கள வரச்சொல்றீங்க இது எல்லாம் எனக்கு கொஞ்சம் கூட புடிக்கல டீச்சர். நீங்க நிறைய விசயம் என்ன கேட்காமலே செய்றிங்க. மத்தது நீங்க இந்தப் பாடசாலைக்கு பொருத்தமற்ற பல விடயங்களை செய்றதா மத்த டீச்சர்மார்கள் எனக்கு ரிப்போர்ட் பண்றாங்க. தயவு செய்து நிதானமாக நடந்து கொள்ளுங்க.

நம்ம ஸ்கூல்ல இருக்கும் டீச்சர்மாரும், டியூசன் வைச்சு நாளு பணம் தேடிக் கொள்றாங்க. நீங்க அதையும் நிப்பாட்டப் பாக்கிறிங்க டீச்சர்" இவற்றையெல்லாம் பொறுமையாகக் கேட்டுக் கொண்டிருந்த ரஜனிக்கு, கோபமும், அழுகையும் பொத்திக் கொண்டு வந்தது. ஓரே அறையாக இழுத்து அறைய வேண்டும் போல் இருந்தது. கோபத்தை அடக்கிக் கொண்டு அதிபரின் காரியாலயத்திலிருந்து வெளியே வந்த ரஜனிக்கு பாடசாலை முடிந்து பெல்லடிக்கும் சத்தம் கேட்டது. ஐயோ! மாலை நேர வகுப்பிற்கு பிள்ளைகள் காத்திருப்பார்களே என ஓடுகின்றாள்.

> **அந்த ஆண்டு நடைபெற்று முடிந்த புலமைப்பரிசில் பரீட்சையில் அப்பாடசாலையிலிருந்து தோற்றுவித்த அனைத்து மாணவர்களும் சித்திப்பெற்று இருந்தார்கள். இதனை கேள்விப்பட்ட ரஜனி டீச்சருக்கு அளவில்லா மகிழ்ச்சி**

அந்த ஆண்டு நடைபெற்று முடிந்த புலமைப்பரிசில் பரீட்சையில் அப்பாடசாலையிலிருந்து தோற்றுவித்த அனைத்து மாணவர்களும் சித்திப்பெற்று இருந்தார்கள். இதனை கேள்விப்பட்ட ரஜனி டீச்சருக்கு அளவில்லா மகிழ்ச்சி. கடின உழைப்பிற்கு கிடைத்தப் பரிசாக கடவுளுக்கு நன்றி சொன்னாள். தன்னுடைய வாழ்க்கையில் ஏதோ ஒன்றைச் சாதித்து விட்ட பூரிப்பில் மனம்மகிழ்ந்தாள். தனக்கு ஆசிரியர் தொழிலில் நல்ல ஆரம்பம் கிடைத்துள்ளதாக நம்பினாள்.

மறுநாள் பாடசாலைக்குச் சென்ற ரஜனி டீச்சரை வாழ்த்துவதற்காகத் தோட்ட மக்கள் அனைவரும் பாடசாலை வாசலில் காத்திருந்தார்கள். அவர்களின் கைகளில் பல வாசகங்கள் எழுதிய பதாதைகள் வைத்திருந்தனர். உங்கள் சேவையைப் பாராட்டுகின்றோம், உங்கள் சேவை வாழ்க என தோட்ட மக்கள் அனைவரும் ஒரே குரலில் கூறினார்கள். தோட்ட மக்களால் அளிக்கப்பட்ட மாலையால் டீச்சரின் கழுத்து நிறைந்து விட்டது. மேள வாத்திய முழக்கத்தடன் மிக மகிழ்ச்சியோடு அப்பாடசாலை அதிபர், ஆசிரியர்களுடன் விழாவுக்கு வருகைத் தந்த விருந்தினர்கள் புடை சூழ ரஜனி டீச்சரை அழைத்துச் சென்றார்கள்.

தன்னுடைய மாணவர்கள் தனக்கு பூச் செண்டு கொடுத்து காலில் விழுந்து வணங்கி வரவேற்ற போது, ரஜனி டீச்சரின் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ண்Pர் பெருக்கெடுத்தது. தன்னுடைய ஆசிரியர் பணியிணையும், வாழ்க்கையையும் இம் மக்களின் பிள்ளைகளுக்காக அர்ப்பணிக்க வேண்டும் என உறுதி பூணுகின்றாள். அன்றைய விழாவில் கலந்து கொண்ட அதிபர் உட்பட கல்வி அதிகாரிகள் தன்னையும் தன்னுடையச் சேவையையும் புகழ்ந்து பேசியதைக் கேட்ட ரஜனிக்கு எதிர்காலத்தில் மேலும் சிறப்பாக வேலை செய்ய வேண்டும் என்ற மனவுறுதியோடு இருந்தாள். விழாவில் இருந்து விடைபெறும் போது சபையில் உள்ளவர்கள் எழுந்து நின்று ஆசிரியரையும், மாணவர்களையும், பெற்றோர்களையும் பாராட்டுகின்றார்கள். இந்த இனிய நினைவுகளுடன் அடுத்த வருட புலமைப்பரிசில் பரீட்சைக்கு செய்ய வேண்டிய புதியத் திட்டங்களை எண்ணியவாறு ரஜனி டீச்சர் வீடு நோக்கி நடக்கின்றாள்.

வட கொரியா

# “எங்களின் பிரதான எதிரி தென் கொரியா”

வட கொரியா ஜனாதிபதி கிம் ஜாங் உன் (Kim Jong Un). “சுப்ரீம் பீபிள்'ஸ் அசெம்பிளி" எனும் வட கொரிய பாராளுமன்றத்தில் கிம் உரையாற்றினார். அதில் தென் கொரியாவுடனான உறவு குறித்து கருத்து தெரிவித்துள்ளார்.

அப்போது அவர், “தென் கொரியாதான் எங்கள் முதல் எதிரி. ஒருவேளை, போர் தேவைப்பட்டால் அதை தவிர்க்க கூடாது. தென் கொரியாவுடன் இணைப்புக்கு இனி சாத்தியமில்லை.

வட கொரியாவிற்கு பிரதான எதிரி தென் கொரியாதான் என வலியுறுத்தும் வகையில் வட கொரிய மக்களுக்கு கற்பிக்க வேண்டும். இதற்காக தேவைப்பட்டால் அரசியலமைப்பு சட்டத்தை மாற்ற வேண்டும்.

இரு நாடுகளுக்கு இடையேயான எல்லைகள் சரியான முறையில் வரையறுக்கப்பட வேண்டும். நாம் போரை விரும்பவில்லை. ஆனால், தேவைப்பட்டால் ஈடுபட தயங்கவே கூடாது.

தென் கொரியா முழுவதையும் ஆக்கிரமிக்க வட கொரியா தன்னை தயார் செய்து கொள்ள வேண்டும். அவர்கள் நமது உடன்பிறப்புகள் அல்ல. இரு நாடுகளுக்கிடையேயான அனைத்து தொடர்புகளும் துண்டிக்கப்பட வேண்டும் என தெரிவித்துள்ளார். மேலும், இரு நாடுகளுக்கு இடையே ஒற்றுமை ஏற்படுத்த முனைந்து வந்த 3 அமைப்புகளின் செயல்பாடுகளுக்கு கிம் தடை விதித்துள்ளார்.

கிம் ஜாங் உன் தெரிவித்த கருத்துகளுக்கு எதிர்வினையாக, “வட கொரியா தாக்குதலில் ஈடுபட்டால், பல மடங்கு வலிமையுடன் எதிர் தாக்குதலில் ஈடுபடுவோம்" என தென் கொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் தெரிவித்துள்ளார்.



இரண்டாவது போட்டியில்

# இலங்கையை வென்ற சிம்பாப்வே



இலங்கைக்கு எதிரான இரண்டாவது இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டியை சிம்பாப்வே வென்றது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், கொழும்பு ஆர். பிரேமதாச மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற சிம்பாப்வேயின் அணித்தலைவர் சிகண்டர் ராசா, தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை, பதும் நிஸங்க, குசல் பெரேரா, குசல் மென்டிஸ், சதீர சமரவிக்கிரமவை வரிசையாக இழந்து 4.4 ஓவர்களில் 27 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளைப் பறிகொடுத்து தடுமாறியது.

பின்னர் ஜோடி சேர்ந்த சரித் அசலங்கவின் 69 (39), அஞ்சலோ மத்தியூஸின் ஆட்டமிழக்காத 66 (51) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 173 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 174 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய சிம்பாப்வே டில்ஷான் மதுஷங்க, மகேஷ் தீக்‌ஷன (2), துஷ்மந்த சமீரவிடம் (2) விக்கெட்டுகளை இழந்தபோதும் கிரேய்க் எர்வினின் 70 (54), லுக் ஜொங்வேயின் ஆட்டமிழக்காத 25 (12), கிளைவ் மடன்டேயின் ஆட்டமிழக்காத 15 (05) ஓட்டங்களோடு 6 விக்கெட்டுகளை இழந்த நிலையில் 19.5 ஓவர்களில் வெற்றியிலக்கையடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக ஜொங்வே தெரிவானார்.

இரண்டு அணிகளுக்குமிடையிலான தீர்மானமிக்க மூன்றாவது போட்டியானது இன்றிரவு 7 மணிக்கு நடைபெறவுள்ளது.



# “ஒவ்வொருவரும் பசியில் தவிக்கிறார்கள்”

கடந்த 2023 ஒக்டோபர் 7ஆம் திகதி தொடங்கி ஹமாஸ் அமைப்பினரை ஒழிக்க இஸ்ரேல் பலஸ்தீன காசா பகுதியில் தொடுத்துள்ள போர், 100 நாட்களை கடந்தும் தீவிரமடைந்து வருகிறது.

பலஸ்தீன காசா பகுதியில் தற்போது வரை 24,285 பேர் உயிரிழந்ததாகவும், 61,154 பேர் காயமடைந்ததாகவும் காசா சுகாதாரத்துறை அறிவித்துள்ளது.

தற்போதைய பலஸ்தீன நிலைவரம் குறித்து ஐ.நா. சபையின் மனித உரிமை நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

அவர்கள் கூறியிருப்பதாவது, “காசா பகுதியில் உள்ள ஒவ்வொரு மனிதரும் பசியுடன் உள்ளனர். அங்குள்ள மக்கள் தொகையில் 25 சதவீதத்திற்கும் மேல் உணவுக்காகவும், குடிநீருக்காகவும் திண்டாடி வருகின்றனர். உணவுக்கும், நீருக்கும் அங்கே கடும் பஞ்சம் நிலவுகிறது. கர்ப்பிணி பெண்களுக்கு சத்தான உணவோ, மருத்துவ வசதியோ கிடைக்கவில்லை. 5 வயதிற்கு உட்பட்ட சுமார் 3,35,000 குழந்தைகள் ஊட்டச்சத்து குறைப்பாட்டினால் தவிக்கின்றனர். ஒரு தலைமுறையை சேர்ந்தவர்கள் வளர்ச்சி குன்றியவர்களாக உருவாக போகின்றனர். காசாவில் எந்த இடமும் பாதுகப்பானதாக இல்லை எனும் நிலை அங்கு தோன்றி விட்டது” என கூறியுள்ளனர்.

அமெரிக்கா

குடியரசு கட்சி ஜனாதிபதி வேட்பாளர்

# முன்னிலையில் டொனால்ட் டிரம்ப்



அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் இந்த ஆண்டு இறுதியில் நடைபெறவுள்ளது. இதில் குடியரசு கட்சி ஜனாதிபதி வேட்பாளர் தெரிவில் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப், நிக்கி ஹாலே, இந்திய வம்சாவளியை சேர்ந்த விவேக் ராமசாமி உள்ளிட்டோர் களத்தில் உள்ளனர்.

இந்நிலையில், குடியரசு கட்சி சார்பில் ஜனாதிபதி வேட்பாளரை தெரிவு செய்யும் காகஸ் என்ற மாகாண அளவிலான உட்கட்சி தேர்தல் தொடங்கியது. இத்தேர்தல் பாரம்பரியமாக அயோவா மாகாணத்தில் இருந்து தொடங்கப்பட்டது.

அந்த மாகாணத்தில் குடியரசு கட்சியின் பிரதிநிதிகள் வாக்களித்தனர். இதில் பதிவான வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் வெளியாகின. 9 மாவட்டங்களின் ஆரம்பக் கட்ட முடிவுகளில் டிரம்ப் 50 சதவீதத்துக்கு மேல் வாக்குகளைப் பெற்றுள்ளார். இதன்மூலம் அவர் அயோவா மாகாணத்தில் வெற்றி பெற்று வேட்பாளர் தெரிவில் முன்னிலையில் உள்ளார்.

உலகக் கிண்ணத்தில்

# ஆர்ச்சர் விளையாடுவரென நம்பிக்கை

சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு-20 உலகக் கிண்ணத் தொடரில் ஜொஃப்ரா ஆர்ச்சர் விளையாடுவரென இங்கிலாந்து நம்பிக்கையுடன் இருப்பதாக அவ்வணியின் நிர்வாக இயக்குநர் றொப் கீ தெரிவித்துள்ளார்.

நீண்ட காலமாக இருக்கும் முழங்கை உபாதையானது மீண்டும் ஏற்பட்டதையடுத்து கடந்தாண்டு மே மாதத்துக்குப் பின்னர் எந்தவொரு போட்டியிலும் 28 வயதான ஆர்ச்சர் விளையாடவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.



மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிராக

# முன்னிலையில் அவுஸ்திரேலியா



மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான முதலாவது டெஸ்டில் முன்னிலையில் அவுஸ்திரேலியா காணப்படுகின்றது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரில், அடிலெய்ட்டில் நேற்று ஆரம்பமான இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலிய அணியின் தலைவர் பற் கமின்ஸ் தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார். மேற்கிந்தியத் தீவுகள் சார்பாக வேகப்பந்துவீச்சாளர் ஷமர் ஜோசப் அறிமுகத்தை மேற்கொண்டதோடு, ஜஸ்டின் கிறேவ்ஸ் மற்றும் கவெம் ஹொட்ஜ் ஆகியோர் டெஸ்ட் போட்டிகளில் அறிமுகத்தை மேற்கொண்டனர்.

முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் கமின்ஸ் (4), ஜொஷ் ஹேசில்வூட் (4), மிற்செல் ஸ்டார்க், நேதன் லையனிடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்து தமது முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 188 ஓட்டங்களையே பெற்றது. துடுப்பாட்டத்தில் கேர்க் மக்கென்ஸி 50, ஷமர் ஜோசப் 36 ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு தமது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா நேற்றைய முதல் நாள் முடிவில் 2 விக்கெட்டுகளை இழந்து 59 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. களத்தில் உஸ்மான் கவாஜா ஆட்டமிழக்காமல் 30, கமரொன் கிறீன் ஆறு ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமலுள்ளனர். வீழ்த்தப்பட்ட 2 விக்கெட்டுகளையும் ஷமர் ஜோசப் கைப்பற்றினார்.

பாகிஸ்தானுக்கெதிரான

# தொடரை கைப்பற்றிய நியூசிலாந்து



பாகிஸ்தானுக்கெதிரான இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டித் தொடரை நியூசிலாந்து கைப்பற்றியது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலிரண்டு போட்டிகளையும் ஏற்கெனவே வென்றிருந்த நியூசிலாந்து, டுனேடினில் நேற்று நடைபெற்ற மூன்றாவது போட்டியை வென்றமையைத் தொடர்ந்தே இன்னும் ஒரு போட்டி மீதமிருக்கையிலேயே தொடரைக் கைப்பற்றியது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பாகிஸ்தான்

நியூசிலாந்து: 224/7 (20 ஓவ.) (துடுப்பாட்டம்: பின் அலென் 137 (62) ஓட்டங்கள்)


பாகிஸ்தான்: 179/7 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: பாபர் அஸாம் 58 (37), மொஹமட் நவாஸ் 28 (15) ஓட்டங்கள். பந்துவீச்சு: டிம் சௌதி 2/29 [4], மிற்செல் சான்ட்னெர் 1/26 [4], லொக்கி பெர்கியூசன் 1/27 [4])

போட்டியின் நாயகன்: பின் அலென்

ஆந்திர பிரதேசம்

சேவல் சண்டையால்

# ஏ.ரி.எம்.களில் பணம் தட்டுப்பாடு



ஆந்திர மாநிலத்தில் சங்கராந்தி பண்டிகையை முன்னிட்டு, கடந்த 3 நாட்களாக சேவல் சண்டைகள் களைகட்டி உள்ளது. மாநிலம் முழுவதும் இந்த சேவல் சண்டைக்கு தடை விதிக்கப்பட்டிருந்தாலும் அதனை மீறி போட்டிகள் நடத்தி வருகின்றனர்.

ஆந்திர மாநிலத்தில் பல்வேறு இடங்களில் வயல்வெளிகளில் பிரமாண்ட கூடாரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இங்கு நூற்றுக்கணக்கான சேவல்கள் பங்குபெறும் சண்டைகள் நடத்தப்பட்டு வருகின்றது.

காலில் கட்டப்பட்ட கத்தியுடன் சேவல்கள் ஆக்ரோஷமாக மோதின. ஒவ்வொரு சேவல்கள் மீதும் இலட்ச கணக்கில் பணம் பந்தயமாக கட்டப்பட்டது.

இதற்காக சூதாட்ட மேஜைகள் அமைக்கப்பட்டிருந்தன. பணம் அதிகமாக கட்டப்பட்டதால் சேவல் சண்டை நடந்த பகுதிகளில் ஏ.ரி.எம்.மில் பணம் தட்டுப்பாடு ஏற்பட்டது. பல ஏ.ரி.எம். மையங்கள் பணம் இல்லாமல் காலியாக கிடந்தன.

இதனை தவிர்க்க சேவல் சண்டை நடைபெற்ற இடங்களில் டிஜிட்டல் பண பரிவர்த்தனை செய்யவும் ஏற்பாடு செய்தனர். அதன் மூலமாக பலர் பந்தயம் கட்டினர். ஒரே நாளில் சுமார் ரூ.500 கோடி வரை பணம் பந்தயமாக கட்டப்பட்டு இருக்கலாம் என தெரிவித்துள்ளனர்.

தெலுங்கானா

# அயோத்தி ராமருக்கு பிரமாண்ட லட்டு

தெலுங்கானா மாநிலம் ஐதராபாத்தை சேர்ந்த நாகபூஷன் ரெட்டி என்பவர், அயோத்தி ராமர் கோவிலுக்கு கொண்டு செல்வதற்காக சுமார் 1,265 கிலோ கிராம் எடையுள்ள லட்டு தயாரித்துள்ளார்.

இவர் கடந்த 2000ஆம் ஆண்டிலிருந்து “ஸ்ரீராம் கேட்டரிங்” என்ற பெயரில் “கேட்டரிங் சர்வீஸ்” நடத்தி வருகிறார்.

இவர், ராமஜென்ம பூமியில் அவதரிக்க உள்ள ராமருக்கு பிரத்தியேகமாக லட்டு தயாரிக்க முடிவு செய்தார். இதற்காக 30 பேர் கொண்ட குழுவினர் 24 மணி நேரமும் தொடர்ந்து பணியாற்றி சுமார் 1,265 கிலோ கிராம் எடையுள்ள லட்டுவை தயார் செய்துள்ளனர்.

இந்த லட்டுவை ஐதராபாத்தில் இருந்து அயோத்திக்கு குளிரூட்டப்பட்ட பெட்டியில் வைத்து கொண்டு செல்ல முடிவு செய்யப்பட்டது.





# மொரின்யோவை நீக்கிய றோமா

இத்தாலிய சீரி ஏ கால்பந்தாட்டக் கழகமான றோமாவை விட்டு உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் ஜொஸே மொரின்யோ விலகியுள்ளதாக அவ்வணி நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

இந்நிலையில், பருவகால முடிவு வரையில் மொரின்யோவின் இடைக்காலப் பிரதியீடாக றோமாவின் ஜாம்பவானான டேனியல் டி றோஸி நியமிக்கப்பட்டுள்ளார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 18 ஜனவரி 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.